1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி தொடங்கப்பட்டு, அந்தக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட வேண்டிய எல்லாவிதமான வசதிகளும், கட்டிடங்களும், பிற ஆய்வுப் பகுதிகளும் முறையாக உருவான பின்னர்தான் அதை அங்கீகரிப்பது என்கிற முறையை இந்திய மருத்துவ மன்றம் வைத்துக்கொண்டுள்ளது. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி அந்தத் தகுதிகளை எல்லாம் பெறக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது. நெல்லை கல்லூரியும் அந்த நிறைவைப் பெறக்கூடிய நிலையைப் பெற்றுவிடும். ஆகவே இவற்றைப் பரிசீலனை செய்து, இவற்றுக்கும் ஏற்பளித்துவிடுவார்கள் என்று நம்புகிறோம்.

சென்னையில் மலேரியா நோய்த் தடுப்பு.

*285 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை நகரில் இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மீண்டும் மலேரியா நோய் பரவியதா?

(இ) ஆமெனில், அதைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) விவர அறிக்கை *யொன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சென்னை நகரில் இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மலேரியா நோய் பரவிய காரணத்தினுல் எத்தனைபேர் இறந்துவிட்டனர் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எத்தனைபேர் இறந்தனர் என்கிற விவரம் இல்லை. ஆனுல் மலேரியா நோயினுல் பாதிக்கப் பட்டவர்கள் மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சை பெற்றவர்கள் எண்ணிக்கை ஜூலை மாதம் 2758 பேர்கள். ஆகஸ்டு மாதம் 4342 பேர்கள்.

[* 400-401-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.]

THIRU K. M. SUBRAMANIAM : Sir, not only Malaria but many other diseases are on the increase in the City of Madras and one of the factors that contributes is the impossibility to control the civic offences like the construction of cow sheds. So, will the Government think of immediately amending the relevant Act so that effective measures can be taken to wipe out such offences?

THE HON. THIRU K. ANBAZHAGAN : I am sure the hon. Member is aware of the fact that the Special Officer of the Corporation is taking all possible steps and if any further amendment is required, he may suggest to the Government.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

*286 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், 1974—75 நிதியாண்டில் குடிநீர் வடிகால் வாரியம் எத்தனை புதிய திட்டங்கள் தயார் செய்தது?

(இ) அவைகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) பத்து திட்டங்கள் ஆய்வு நிலையில் உள்ளன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, சேரன் மாதேவி பேரூராட்சி குடிநீர் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? அந்தத் திட்டத்தினை முக்கூடல், மயிலப்புரம் ஊராட்சி குடிநீர் திட்டத்தினோடு நிறைவேற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சேரன் மாதேவி—பத்தமடை, வீரநல்லூர், ஆகிய குடிநீர் திட்டங்களின் மதிப்பீடு முறையே ரூ. 17.62 லட்சம், ரூ. 12.70 லட்சம் ஆகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு திட்டங்களோடு கண்ணியூர் பஞ்சாயத்துத் திட்டம், வடக்கு கருகுறிச்சி திட்டம் சேருமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. அதோடு பத்தமடை